DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.26**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | உதயகுமார் |
| Father Name | : | முனியசாமி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 11வது எதிரி இறப்பு. 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர் இல்லை. 17 மற்றும் 18 எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3, 4, 5, 6, 8, 9, 10, 12, 13, 14, 15 மற்றும் 16 எதிரிகள் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது வில்லாபுரத்தில் வசித்து வருகிறேன். என்னை இந்த வழக்கில் விசாரித்து போலீஸார் வாக்குமூலம் பெறவில்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் திமு கழகத்தில் மாவட்ட துணை செயலாளராக பொறுப்பு வைத்து பணியாற்றி வந்தேன் என்றும், கட்சிக்காரர் என்ற முறையில் பொட்டு சுரேஷ் உடன் பழக்கம் இருந்தது என்றும், அட்டாக் பாண்டி என்னுடைய உறவினர் என்பது மட்டுமே மற்றும் மற்றபடி அவருடன் எந்த பேச்சுவார்த்தையும் கிடையாது

என்றும், அட்டாக் பாண்டிக்கும், பொட்டு சுரேஷ் என்பவருக்கு பகை என்பதை பேப்பரில் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றும், கடந்த 30.01.2013ம் தேதி அண்ணன் பிறந்த நாள் என்று அவர் கூட இருந்தேன் என்றும், 31.01.2013ம் தேதி இரவு அண்ணனுடைய வீட்டில் நலத்திட்ட உதவிகள் கொடுப்பதற்காக அந்த பணியில் இருந்தேன் என்றும், அப்போது பொட்டு சுரேஷ் கொலையுண்ட செய்தியை கேட்டு இரவு சுமார் 10.00 மணிக்கு GRH சென்று அவருடைய பிரேதத்தை பார்த்தேன் என்றும், இரண்டு நாட்கள் கழித்து இவ்வழக்கில் சரணடைந்தவர்களை பேப்பிரிலும், டிவியிலும் பார்த்தேன் என்றும், மற்றபடி இவர்களுக்குள் விரோதம் பற்றி எனக்கு தெரியாது என்றும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:52:29 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.